

கடந்த இரு தினங்களுக்கு முன்பு திண்டுக்கல் மாவட்டம் பழனி சட்டமன்றத் தொகுதி கொடைக்கானல் மேல்மலை பூண்டி கிராமம் கிளாவரை வந்தரேவு வனச்சரக பகுதியில் மண் பிளவு ஏற்பட்டதையடுத்து திண்டுக்கல் கிழக்கு மாவட்ட செயலாளரும் பழனி சட்டமன்ற உறுப்பினருமான ஐ பி செந்தில்குமார் புவியியல் தொழில்நுட்ப இணை இயக்குநர் சுந்தரராமன் திண்டுக்கல் நாடாளுமன்ற உறுப்பினர் ஆர்.சச்சிதானந்தம் வனச்சரகர் பிரபு, ஊரக வளர்ச்சித்துறை அதிகாரிகள், வருவாய்த்துறை அதிகாரிகளுடன் பார்வையிட்டார். உடன் மாவட்ட கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

### திராவிட மாடல் ஆட்சி நாயகன் மு.க.ஸ்டாலின்

# மக்களுக்கான ஆட்சியில் தமிழகத்தில் குடிசை வீடுகள் இல்லாத நிலை உருவாகும்!

## அமைச்சர் ஐ.பெரியசாமி பெருமிதம்!

திண்டுக்கல், செப். 25 -

திராவிட மாடல் ஆட்சி நாயகன் மு.க.ஸ்டாலின் அவர்களின் மக்களுக்கான ஆட்சியில் தமிழகத்தில் குடிசை வீடுகள் இல்லாத நிலை உருவாகும் என்று ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் ஐ.பெரியசாமி பெருமிதமாக கூறியதோடு ஆத்தூர் தொகுதியில் ஒன்றிய செயலாளர்கள், தலைமைச் செயற்குழு உறுப்பினர், ஊராட்சிமன்ற தலைவர்கள் தலைமையில் கலைஞரின் கனவு இல்லம் கட்டும் பயனாளிகளுக்கு தளவாடபொருட்கள் சிரமமின்றி கிடைக்க நடவடிக்கை எடுத்து வருவதற்கு அமைச்சர் ஐ.பெரியசாமி அவர்களுக்கு பயனாளிகள் மனதார பாராட்டு தெரிவித்துள்ளனர்.



தமிழகத்தில் திராவிட மாடல் ஆட்சி நாயகர் தமிழக முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தலைமையிலான மக்களுக்கான நல்லாட்சியி;ல் குடிசை இல்லா வீடுகளை உருவாக்க திட்டமிட்டு தமிழகம் முழுவதும் 8லட்சம் வீடுகள் கலைஞரின் கனவு இல்ல திட்டம் மூலம் ஊரக வளர்ச்சித்துறை சார்பாக கட்டிக்கொடுக்கப் பட உள்ளது. இதற்காக தகுதிவாய்ந்த பயனாளிகள் தேர்வு செய்யப்பட்டு 202425ம் ஆண்டிற்கு 1½ லட்சம் பயனாளிகள் தேர்வு செய்யப்பட்டுள்ளனர். குறிப்பாக ஆத்தூர் தொகுதியில் உள்ள ஆத்தூர் ஒன்றியத்தில் 1256 பயனாளிகள் தேர்வு செய்யப் பட்டுள்ளனர். இதுபோல ரெட்டியார்சத்திரம் ஒன்றியத்தில் 833 பயனாளிகள் தேர்வு செய்யப்பட்டனர். அதன்பின்னர் 192 பயனாளிகளுக்கு வீடுகள் வழங்குவதற்கு மனுக்கள் பெறப் பட்டு மொத்தம் 1025 பயனாளிகளுக்கு வீடுகள் கட்டிக்கொடுக்கபட உள்ளது அமைச்சர் ஐ.பெரியசாமி அவர்கள் கட்சிநிர்வாகிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள் மத்தியில் பேசும்போது ஒவ்வொரு ஊராட்சியிலும் கலைஞரின் வீடு வழங்கும் திட்டம் மூலம் வீடுகள் கட்டும் பயனாளிகளுக்கு முறையான செங்கல், சிமெண்ட், கம்பி கிடைக்கிறதா என்பதை கேட்டறிந்ததோடு சிரமமின்றி பயனாளிகளுக்கு செங்கல், சிமெண்ட், கம்பி உட்பட தளவாட சாமான்கள் கிடைக்க அந்தந்த பகுதியில் உள்ள உள்ளாட்சி பிரதிநிதிகள் மற்றும் கட்சிநிர்வாகிகள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென உத்தரவிட்டார். இதுதவிர பயனாளிகள் வீடுகள் கட்டுவதை அடிக்கடி பார்வையிட வேண்டுமென உத்தரவிட்டார். இதற்காக தலைமைச் செயற்குழு உறுப்பினர், ஆத்தூர் நடராஜன், ஆத்தூர் கிழக்கு ஒன்றிய செயலாளர் பிள்ளையார்நத்தம் முருகேசன், மேற்கு ஒன்றிய செயலாளர் ராமன் மற்றும் ரெட்டியார்சத்திரம் தெற்கு ஒன்றிய செயலாளரும், ஒன்றிய பெருந்தலைவருமான ப.க.சிவகுருசாமி, வடக்கு ஒன்றிய செயலாளர் மணி மற்றும் ஒன்றியகழக நிர்வாகிகள் கலைஞரின் கனவு இல்ல திட்ட பயனாளிகளுக்கு தளவாட சாமான்கள் தங்குதடையின்றி கிடைக்க நடவடிக்கை எடுத்து வருகின்றனர். வீடுகள் கட்டுவதற்கான ஆணையை வழங்கியதோடு மட்டுமின்றி பயனாளிகளின் கஷ்டங்களை உணர்ந்து அவர்களுக்கு சலுகை விலையில் கட்டிட பொருட்களை வழங்க நடவடிக்கை எடுத்த திமுக மாநில துணைப்பொது ச் செயலாளரும், ஊரக வளர்ச்சித்துறை அமைச்சருமான ஐ.பெரியசாமி அவர்களுக்கு சமூக ஆர்வளர்கள் பாராட்டு தெரிவித்துள்ளனர். இதுகுறித்து ஐ.பெரியசாமி அவர்கள் கூறுகையில் இந்தியாவே போற்றும் ஒப்பற்ற தலைவர் முன்னாள் முதல்வர் தமிழனத்தலைவர் டாக்டர். கலைஞர் அவர்களின் பெயர் தாங்கிய திட்டமான கலைஞரின் கனவு இல்ல திட்டம் திராவிட மாடல் ஆட்சி நாயகர் தமிழக முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்களுக்கு பெருமை தேடித்தரும் திட்டமாகும். இதன் மூலம் தமிழகத்தில் குடிசைகள் இல்லா நிலை உருவாகும். ஆத்தூர் தொகுதியில் கலைஞரின் கனவு இல்ல திட்டம் மூலம் வீடுகள் கட்டுவதற்கான ஆணை பெற்ற பயனாளிகள் அனைவரும் கூலித்தொழி லாளர்களே அவர்களின் சிரமங்களை உணர்ந்து கலைஞரின் கனவு இல்ல திட்டம் வீடுகள் கட்டுவதற்கான தளவாட பொருட் களை சலுகை விலையிலும், தங்குதடையின்றி கிடைக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இதன்மூலம் விரைவாக பயனாளி கள் வீடுகளை கட்டி முடிப்பார்கள் என்றார்.

### கங்கைகொண்டானில் விபத்தில் 4 பேர் பலி

# குடும்பத்தினருக்கு நிதி உதவி!

## அமைச்சர் ஆர். எஸ்.ராஜகண்ணப்பன் வழங்கினார்!

நெல்லை.செப்.25-

நெல்லை மாவட்டம் கங்கைகொண்டான் ராஜபதி பகுதியைச் சேர்ந்த கண்ணன்(வயது 40) அவரது மாமியார் ஆண்டாள்(வயது 60) மகள்கள் மாரீஸ்வரி(வயது 14) சமீரா (வயது 7)ஆகிய ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 4 பேர்கள் கடந்த 17.09.2024 அன்று ஒரு மோட்டார் சைக்கிளில் நெல்லை தச்சநல்லூர் வடக்கு பைபாஸ் ரோட்டில் வண்ணார்பேட்டை நோக்கி வந்து கொண்டிருந்தனர்.மணி மூர்த்தீஸ்வரம் விலக்கு அருகே வந்து கொண்டிருந்தபோது எதிர்பாராத விதமாக முன்னால் சென்ற லாரியை கடந்து செல்ல முயன்ற போது டேங்கர் லாரி மோதியதில் 4 பேர்களும் சம்பவ இடத்தில் உயிரிழந்தனர்.

இது பற்றிய தகவல் அறிந்ததும் பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் ஆர்.எஸ்.ராஜகண்ணப்பன் நிதி உதவி வழங்க தனது மகன் பிரபு ராஜ கண்ணப்பனை ராஜபாதி கிராமத்துக்கு அனுப்பி வைத்தார்.பிரபு ராஜ கண்ணப்பன் விபத்தில் உயிரிழந்த கண்ணன் வீட்டிற்கு நேரில் சென்று குடும்பத்தினர்களிடம் ஆறுதல் கூறி நிதி உதவி வழங்கினார்.

அப்போது மாநில நெசவாளர் அணி செயலாளர் சொ.பெருமாள்,நெல்லை மாநகராட்சி துணை மேயர் கே.ஆர்.ராஜ் விருதுநகர் யாதவர் மகாசபை தலைவர் சாத்தூர் முருகேசன்,ஒன்றிய செயலாளர் அருள்மணி, முன்னாள் மாவட்ட துணைச் செயலாளர் ஆ.கா. மணி,தலைமை கழகப் பேச்சாளர் மைக் மணி,மாபுதூர் பஞ்சாயத்து தலைவர் சூழ்ச்சியார்,ஆவின் கல்யாணி, மாவட்ட இலக்கிய அணி தலைவர் முனைவர் தங்கப்பாண்டி,ஐயப்பன் ஆகியோர் உடன் சென்றனர்.



தமிழ்நாடு அரசு வனத்துறை சார்பில இராமநாதபுரம் மாவட்டம் வனத்துறை சார்பாக பசுமை தமிழ்நாடு தினத்தை முன்னிட்டு இன்று பரமக்குடி சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட இலந்தைகுளம் கிராமத்தில் மரக்கன்றுகள் நடும் விழாவை சட்டமன்ற உறுப்பினர் செ. முருகேசன், துவக்கி வைத்தார். இந்நிகழ்வில் மாவட்ட வன அலுவலர் ஹேமலதா வனச்சரக அலுவலர்கள் நாகராஜன் அன்பரசி, வனவர்கள் ராதாகிருஷ்ணன், தேவகுமார், வீராசாமி, கேசவமூர்த்தி, கமுதக்குடி ஊராட்சி மன்ற தலைவர் கவிதா மோகன் மற்றும் முன்னாள் ஒன்றிய செயலாளர் சந்திரசேகர் நைனார்கோவில் ஒன்றிய துணைச் செயலாளர் திலகர் மற்றும் கழக நிர்வாகிகள் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.



தேனி தெற்கு மாவட்டம் சின்னமனூர் அரசு பள்ளியில் விலையில்லா மிதிவண்டி தெற்கு மாவட்டச் செயலாளர் கம்பம் ராமகிருஷ்ணன் எம் எல் ஏ மாணவ மாணவர்களுக்கு வழங்கினார். உடன் அய்யம்மாள்ராமு, நகர செயலாளர் முத்துக்குமார் மாவட்ட துணை செயலாளர் செந்தில், நகர அவைத் தலைவர் மனோகரன், கழக முன்னோடிகள், அரசு அதிகாரிகள் கலந்து கொண்டனர்.



பத்மஸ்ரீ டாக்டர் பா.சிவந்தி ஆதித்தனார் அவர்களின் 89 ஆவது பிறந்தநாளை முன்னிட்டு திருச்செந்தூரில் அமைந்துள்ள அன்னாரது திருவுருவச் சிலைக்கு மீன்வளம் மீனவர் நலன் மற்றும் கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சரும் தூத்துக்குடி தெற்கு மாவட்ட கழகச் செயலாளருமான அனிதா ஆர்.ராதாகிருஷ்ணன் ஒட்டப்பிடாரம் சட்டமன்ற உறுப்பினர் எம். சி.சண்முகையா மாவட்ட ஆட்சித் தலைவர் இளம்பகவத் ஆகியோர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்கள். இந்நிகழ்ச்சியில் மாநில வர்த்தக அணி இணைச் செயலாளர் எஸ்.ஆர்.எஸ்.உமரிசங்கர், மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் பை.மூ.ராமஜெயம், திருச்செந்தூர் நகர் மன்றத் தலைவர் திருமதி சிவ. ஆனந்தி,துணை நகர் மன்ற தலைவர் செங்குழி.ஏ.பி.ரமேஷ்,பில்லா ஜெகன்,திருச்செந்தூர் அ/மி சுப்பிரமணிய சுவாமி திருக்கோவில் அறங்காவலர் அருள் முருகன், நகரச் செயலாளர் வாள் சுடலை,நகர் மன்ற உறுப்பினர்கள் 14 வது வார்டு ரேவதி கோமதிநாயகம்,16வது வார்டு ஆனந்த்,மணல்மேடு சுதாகர், மணிகண்டன், மாவட்ட வழக்கறிஞர் அணி அமைப்பாளர் செல்வகுமார்,மாவட்ட தொண்டரணி அமைப்பாளர் வீரபாகுமற்றும் கழக நிர்வாகிகள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

### இலங்கையில் புதிய அரசு பதவியேற்றிருக்கும் நிலையில் ஒன்றிய அரசு இராஜதந்திர நடவடிக்கையில் ஈடுபட்டு

# இலங்கைக் கடற்படைக்கு கடிவாளம் போட வேண்டுமென்பதே தமிழர்கள் எதிர்பார்ப்பு!

## ‘தினகரன்’ நாளேடு தலையங்கத்தில் வலியுறுத்தல்!

சென்னை, செப்.25-

இலங்கையில் புதிய அரசு பதவியேற்றிருக்கும் நிலையில் ஒன்றிய அரசு இராஜதந்திர நடவடிக்கையில் ஈடுபட்டு இலங்கைக் கடற்படைக்கு கடிவாளம் போட வேண்டு மென்பதே தமிழக மீனவர்கள் மட்டுமின்றி ஒட்டு மொத்த தமிழர்களின் எதிர்பார்ப்பாகும் என்று “தினகரன்” நாளேடு தலையங்கம் வெளியிட்டுள்ளது. அது வருமாறு:-

தமிழக மீனவர்கள், எத்தனை காலத்துக்கு செத்து செத்து பிழைப்பது. இந்திய குடிமக்களை காப்பாற்ற வேண்டிய கடமை ஒன்றிய அரசுக்கு இருக்கிறதா, இல்லையா என கேள்வி எழுகிறது. ஒவ்வொரு வாரமும் மீனவர்களை கைது செய்வதும், பல லட்சம் மதிப்புள்ள வலைகள், படகுகளை பறிமுதல் செய்வதும் தொடர்கதையாகி வருகிறது.

தமிழக மீனவர்களின் வாழ்வாதாரம் தொடர்ந்து பறிக்கப்பட்டால் அவர்கள் வாழ்வது எப்போது? அவர்களின் குடும்பத்தின் நிலை பரிதாபத்துக்கு உள்ளாகிறது. கடந்த 10ம் தேதி நாகை மாவட்டம் ஆற்காட்டுத்துறையை சேர்ந்த மீனவர்கள் பைபர் படகில் கடலுக்கு மீன்பிடிக்க சென்றனர்.

நடுக்கடலில் மீனவர்கள் மீன்பிடித்துக்கொண்டிருந்த போது, அங்கு வந்த இலங்கை கடற்படையினர் நாகை மீனவர்களின் படகின் மீது மோதி தாக்குதல் நடத்தி உள்ளனர். மேலும் படகில் ஏறியும் ஆயுதங்களால் தாக்கியுள்ளனர்.5 லட்சம் மதிப்புள்ள 700 கிலோ வலைகளை பறித்துக் கொண்டு மீனவர்களை விரட்டி அடித்துள்ளனர். இந்த தாக்குதலில் 4 மீனவர்கள் காயம் அடைந்தனர். இந்த சம்பவம் குறித்து வேதாரண்யம் கடலோர காவல் குழும போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

கடந்த ஆகஸ்ட் மாதம் கடைசி வாரத்தில் தனுஷ்கோடி கடல் பகுதியில் மீன் பிடித்து கொண்டிருந்த மீனவர்களை தடுத்து நிறுத்திய இலங்கை கடற்படையினர் எல்லை தாண்டி மீன் பிடித்ததாக கூறி, ஒரு விசைப்படகையும் அதில் பயணித்த 8 மீனவர்களையும் சிறை பிடித்து சென்றனர். வழக்கம் போலவே இந்திய அரசாங்கம், டெல்லியில் உள்ள இலங்கை தூதரக அதிகாரிகளை அழைத்து, “தமது அதிர்ச்சியையும் மிகுந்த வேதனையையும்” தெரிவிக்கிறது. ஏற்கனவே 50க்கும் மேற்பட்ட தமிழக மீனவர்கள் இலங்கை சிறையில் வாடி வருகின்றனர்.

கடந்த 5 ஆண்டுகளில் இலங்கை கடற்படை பறிமுதல் செய்த 185 விசைப்படகுகள் இன்னும் மீட்கப்படவில்லை. தற்போது நாட்டு படகுகளையும் குறிவைத்து தாக்கப்படுவதும் அல்லது மோதி மூழ்க செய்வதுமான இலங்கை கடற்படையின் அட்டூழியம் நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. கைது செய்யப்பட்ட மீனவர்களையும், மீன்பிடி படகுகளையும் விடுவிக்க வேண்டும் என கோரிக்கை வைத்து தமிழக மீனவர்கள் போராடி வரும் நிலையில், நேற்று நெடுந்தீவு அருகே கடலில் மீன்பிடித்துக் கொண்டிருந்த 5 மீனவர்களை கைது செய்து



தினகரன்

செப்டம்பர் 24, 2024 செவ்வாய்க்கிழமை

கடிவாளம் வேண்டும்

தமிழக மீனவர்கள், எத்தனை காலத்துக்கு செத்து செத்து பிழைப்பது. இந்திய குடிமக்களை காப்பாற்ற வேண்டிய கடமை ஒன்றிய அரசுக்கு இருக்கிறதா, இல்லையா என கேள்வி எழுகிறது. ஒவ்வொரு வாரமும் மீனவர்களை கைது செய்வதும், பல லட்சம் மதிப்புள்ள வலைகள், படகுகளை பறிமுதல் செய்வதும் தொடர்கதையாகி வருகிறது.

தமிழக மீனவர்களின் வாழ்வாதாரம் தொடர்ந்து பறிக்கப்பட்டால் அவர்கள் வாழ்வது எப்போது? அவர்களின் குடும்பத்தின் நிலை பரிதாபத்துக்கு உள்ளாகிறது. கடந்த 10ம் தேதி நாகை மாவட்டம்

ஒரு படகையும் பறிமுதல் செய்துள்ளது.

இதற்கும் ஒருபடி மேல் சென்று கடந்த ஜூன் 25ம் தேதி நெடுந்தீவு அருகே மீன்பிடித்துக் கொண்டிருந்த 10 மீனவர்களை கைது செய்து, கொலை வழக்கு பதிவு செய்தது தமிழக மீனவர்கள் மத்தியில் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. இவர்களது படகு மோதி இலங்கை கடற்படை வீரர் ரத்நாயக உயிரிழந்ததாக காங்கேசன் துறை காவல் நிலைய போலீசார் கூறுகின்றனர்.

இலங்கைக் கடற்படையால் கைது செய்யப்பட்ட அனைத்து மீனவர்களையும் விடுவிக்க நடவடிக்கை எடுக்கக்கோரி ஒன்றிய வெளியுறவுத்துறை அமைச்சருக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் கடிதம் எழுதியுள்ளார். அதில் இலங்கைக் கடற்படையால் கைது செய்யப்படும் மீனவர்களுக்குத்தேவையான சட்ட உதவிகளை வழங்க வேண்டும். அதிகளவில் அபராதம் விதிப்பதை தடுக்க வேண்டும் என்று வலியுறுத்தி உள்ளார்.

இந்நிலையில் இலங்கையின் 9வது அதிபராக அனுர குமார திசநாயக நேற்று பதவியேற்றுக்கொண்டார். புதிய அரசு அமையும் போது இந்தியா அரசு ராஜதந்திர நடவடிக்கையில் ஈடுபட்டு இலங்கைக் கடற்படைக்கு கடிவாளம் போட வேண்டும் என்பதே மீனவர்கள் மட்டுமல்லாமல், ஒட்டு மொத்த தமிழர்களின் எதிர்பார்ப்பாக உள்ளது.

இவ்வாறு அத்தலையங்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

### பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையரின் மாமனார்

# உமாசங்கர் மறைவு!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல்

சென்னை, செப்.25-

பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் அவர்களின் மாமனார் உமாசங்கர் அவர்களின் மறைவையொட்டி தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் இரங்கல் தெரிவித்துள்ளார்.

இது குறித்து முதல்வர் அவர்களின் இரங்கல் செய்தி வருமாறு:-

பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் ஜெ. குமரகுருபரன், அவர்களின் மாமனார் கே. உமாசங்கர் (வயது 68) அவர்கள் உடல்நலக்குறைவால் நேற்று (23.9.2024) மாலை உயிரிழந்தார் என்ற செய்தி அறிந்து மிகுந்த வேதனை அடைந்தேன். அவரது மறைவிற்கு எனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அவரை இழந்து வாடும் குமரகுருபரன் அவர்களுக்கும், அவரது குடும்பத்தினருக்கும், உறவினர்கள் மற்றும் நண்பர்களுக்கும் எனது ஆறுதலைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு முதல்வர் அவர்கள், தமது இரங்கல் செய்தியில் கூறியுள்ளார்.



கன்னியாகுமரி கிழக்கு மாவட்டம், தோவாளை வடக்கு ஒன்றிய கழக பொது உறுப்பினர்கள் கூட்டம் ஒன்றிய செயலாளர் மோ.பிராங்கிளின் தலைமையில், மாவட்ட பொருளாளர் ஐ.கேட்சன், பேரூர் கழக செயலாளர்கள் எ.அருள்தாஸ், ப.ஆலிவர்தாஸ் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது. கூட்டத்திற்கு மாவட்டச் செயலாளர், மேயர் ரெ.மகேஷ் கலந்து கொண்டு திராவிட மாடல் அரசின் நலத்திட்டங்களை எடுத்து கூறி கழக வளர்ச்சி பணிகள் மற்றும் இல்லந்தோறும் இளைஞர் அணி உறுப்பினர்கள் சேர்க்கை தொடர்பாக ஆலோசனைகள் வழங்கி சிறப்புரையாற்றினார். கூட்டத்தில் மாவட்ட துணை செயலாளர்கள் எஸ்.கரோலின் ஆலிவர்தாஸ், ஏ.ஆர்.பூதலிங்கம்பிள்ளை, மு.சதீஸ், மி.ஆஸ்டின் பெனட், செ.சரவணன் உட்பட மாவட்ட, ஒன்றிய, பேரூர், கிளை கழக நிர்வாகிகள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், கழக சார்பு அணிகளின் நிர்வாகிகள், BLA2, BLC மற்றும் கழக பொது உறுப்பினர்கள் கலந்து கொண்டனர். கூட்டத்தில் 5 தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது.



நெல்லை மாவட்டம் கங்கைகொண்டான் ராஜபதி பகுதியைச் சேர்ந்த கண்ணன் (வயது 40) அவரது மாமியார் ஆண்டாள் (60) மகள்கள் மாரீஸ்வரி(14 )சமீரா( 7) ஆகிய ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 4 பேர்கள் மோட்டார் சைக்கிளில் சென்றபோது எதிர்பாராத விதமாக லாரி மோதியதில் சம்பவ இடத்தில் உயிரிழந்தனர். இது பற்றிய தகவல் அறிந்ததும் அமைச்சர் ஆர்.எஸ்.ராஜ கண்ணப்பன் தனது மகன் பிரபு ராஜகண்ணப்பணிடம் நிதி உதவி கொடுத்து அனுப்பி வைத்தார். அதனைத் தொடர்ந்து பிரபு, இறந்த கண்ணன் குடும்பத்தினரை நேரில் சந்தித்து ஆறுதல் கூறி நிதி உதவி வழங்கினார். உடன் மாநில நெசவாளர் அணி செயலாளர் பெருமாள் துணை மேயர் ராஜ், ஒன்றிய செயலாளர் அருள்மணி, முன்னாள் மாவட்ட துணை செயலாளர் ஆ.கா.மணி உள்பட பலர் உள்ளனர்.